# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

## <u>O.S.No.33/2018</u>

**<u>PW1</u>** <u>ஜெயராணி</u> நாள் 26.10.2022

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றிற்கு நான் தான் தகவல் சொன்னேன். என் கணவர் கருணாகரன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்து துறைமங்கலம் கிராமம் சர்வே எண். 13/2B, 2320 சதுர அடி மற்றும் பிளாட் எண் 4 என்றால் சரிதான். அது பின்னிட்டு UDR சர்வே எண். 13/2B, 1A என்று ஆனது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. பிளாட் எண் 5 என் கணவரின் சொத்து என்றால் சரிதான். பிளாட் எண் 5 ஆனது பிளாட் எண் 4 க்கு கிழக்கில் உள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு எங்களுக்கு தனிப்பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தனிப்பட்டா கொடுப்பதற்காக உட்பிரிவு செய்தபோது 13/2B என்பது 13/2B6 என்று மாற்றப்பட்டு பின்னிட்டு 13/7 என்று எனக்கு பட்டா வழங்கப்பட்டது, 13/6 என்று என் கணவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது, அது பி.வா.சா.ஆ–1 ஆகும். (வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபித்தார்). என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் வீடு கட்டுவதற்காக வரைபட அனுமதி கேட்டு பெரம்பலூர் ஆணையரிடம் விண்ணப்பித்து அதில் நான் கையொப்பம் இட்டுள்ளேன். அந்த வரைபடம் தான் என்னிடம் காட்டப்படுவது. அது பி.வா.சா.ஆ–2 ஆகும். அந்த வரைபடத்தின்படி நான் வீடு கட்டவில்லை. மீண்டும் அந்த அனுமதி புதுப்பித்து கேட்டு தாவா சொத்தில் வீடு கட்டுவதற்காக அனுமதி கேட்டேன் அவ்வாறு வரைபட அனுமதி புதுப்பித்தது தான் என்னிடம்

காட்டப்படுவது. அது பி.வா.சா.ஆ-3 ஆகும். நான் பி.வா.சா.ஆ-3 இன் படிக்கும் தாவா சொத்தில் வீடு கட்டவில்லை என்றால் சரிதான். நான் 1 ஆம் பிரதிவாதிக்கு 23.01.2015 இல் கொடுத்த கிரையம் செல்லும் என்று தான் வழக்கு போட்டுள்ளேன். இந்த வழக்கு 14.09.2018 இல் தாக்கல் செய்தேன். 23.01.2015 இல் 1வது பிரதிவாதிக்கு நான் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் அசல் தான் என்னிடம் காட்டப்படுவது, அது பி.வா.சா.ஆ-4 ஆகும். 11.10.1989 அன்று தாவா சொத்தை நான் கிரையம் வாங்கிய பத்திரம் தான் என்னிடம் காட்டப்படுவது, அது பி.வா.சா.ஆ-5 ஆகும். எனக்கு கிரையம் கொடுத்த சரோஜா 15.12.1987 அன்று டி.சுப்பிரமணி என்பவரிடமிருந்து கிரையம் வாங்கிய பத்திரத்தின் அசல் தான் என்னிடம் காட்டப்படுவது, அது பி.வா.சா.ஆ-6 ஆகும். மேற்படி துரைசாமி மகன் சுப்பிரமணி நடேசன் மகன் சுப்பிரமணியத்திடமிருந்து கிரையம் வாங்கிய பத்திரத்தின் அசல் தான் என்னிடம் காட்டப்படுவது, அது பி.வா.சா.ஆ-7 ஆகும். நடேசன் மகன் சுப்பிரமணியனுக்கு அவரது அம்மா பொன்னம்மாள் தாவா சொத்து உட்பட ஏனைய சொத்துக்களை தான செட்டில்மெண்ட் மூலம் 26.11.1982 அன்று எழுதிக்கொடுத்த வகையில் அவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் நகல் தான் வா.சா.ஆ-1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பொன்னம்மாளின் கணவர் பெயர் நடேச முதலியார் என்றால் சரிதான். நடேசன் பொன்னம்மாளிற்கு இரண்டு மகன்கள் சுப்பிரமணி, துரைராஜ் ஆகியோர் ஆவார்கள். பொன்னம்மாள் சுப்பிரமணிக்கு வடக்கே உள்ள 13/2 சர்வே எண்ணில் 1 ஏக்கர் 18½ செண்ட் இடத்தை தானமாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொத்து விவரத்தில் தென்புறத்தில் காட்டப்பட்டிருக்கும் துரைராஜ் என்பவர் சுப்பிரமணியின் சகோதரர் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் கிழக்கு புறத்தில் உள்ள சொத்தை என் கணவர் என்.சுப்பிரமணியம் என்பரிடமிருந்து 15.12.1987 அன்று கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ-21 ஆகக் குறியீடு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவர் கிரையம் வாங்கிய மனையை 2 பாகங்களாகப் பிரித்து மேல்புறத்தை ஆனந்தஜோதி என்பவருக்கும், கீழ்புறத்தை விஜய் ஆனந்த என்பவருக்கும் விற்றுவிட்டார் என்றால் சரிதான். மேற்படி கிரையப் பத்திரங்களை தான் வா.சா.ஆ-22, வா.சா.ஆ-23 ஆக நான் தாக்கல் செய்துள்ளேன். 1ஆம் பிரதிவாதி என்னிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்தில் பாதியை அவரது கணவரான 2ஆம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ-8 ஆகும். பொன்னம்மாளிற்கு வெண்ணிலை பாகப்பத்திரம் மூலமாக சொத்துக்கள் கிடைத்ததாக பிராதில் சொல்லியுள்ளேன், ஆனால் அந்த பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை. 1981 இல் சுப்பிரமணி தன்னுடைய மகனுக்கு தான செட்டில்மெண்ட் மூலமாக தாவா சொத்து உட்பட ஏனைய சொத்துக்களை எழுதிவைத்துள்ளார், அந்த ஆவணத்தை நான் வா.சா.ஆ-14 ஆகக் குறியீடு செய்துள்ளேன். வா.சா.ஆ-14 இல் சர்வே எண். 13/2B இல் வடபுறம் உள்ள 1ஏக்கர் 18½ செண்ட் இடத்தை தான் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார். சுப்பிரமணிக்கு அந்த சொத்துக்கள் 1982 இல் தான் வா.சா.ஆ-1 மூலமாகக் கிடைத்தது. வா.சா.ஆ-14 இன்படி கிடைத்த சொத்துக்களில் ஒரு பகுதியை செல்வராஜ் சேகர் என்பவருக்கு 03.03.2009 இல் கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ-15 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சேகர் என்பவர் 30.04.2015 இல் குலோத்துங்கன் என்பவருக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ-9 ஆகும். என்னுடைய பிராதுப்படி சுப்பிரமணி செல்வராஜிற்கு எழுதிக்கொடுத்த கிரையம், செல்வராஜ் சேகருக்கு எழுதிக்கொடுத்த கிரையம், சேகர் குலோத்துங்கனுக்கு எழுதிக்கொடுத்த கிரையம் ஆகியவை செல்லாது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே நகல் எடுத்துவிட்டேன் என்றால் சரிதான். ஆனால் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை

எடுக்கவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டாவை வா.சா.ஆ-13 ஆக தாக்கல் செய்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் என் பெயரில் நில அபகரிப்பு மோசடி பிரிவில் காவல் துறையில் என் மீது புகார் கொடுத்ததாக கூறியுள்ளேன். அதன் அடிப்படையில் காவல் துறையிலிருந்து என்னை தொடர்ந்து மிரட்டியதால் நான் இந்த வழக்கு போட்டுள்ளதாக சொல்லியுள்ளேன். எந்த தேதியில் 1, 2 பிரதிவாதிகள் என் பெயரில் நில அபகரிப்பு மோசடி பிரிவில் காவல் துறையில் என் மீது புகார் கொடுத்தார்கள் என்று பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நில அபகரிப்பு மோசடி பிரிவில் காவல் துறையினர் என்னை பலமுறை போன் மூலம் மிரட்டியதாக சொல்லியுள்ள போதும் அவர்களை தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை. தற்போது செல்வராஜ், சேகர், குலோத்துங்கன் ஆகியோரை தரப்பினராக வழக்கில் சேர்க்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி மூவரை நான் தரப்பினராக சேர்க்காவிட்டால் பிரதிவாதிகள் அவர்களை தரப்பினராக சேர்ப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. 26.09.2012 இ,ல் என் பெயருக்கும், என் கணவருக்கும் ஏற்பட்ட தனிப்பட்டா RDO மூலம் இரத்து செய்யப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு RDO அலுவலகத்திலிருந்து சம்மன் வந்தது என்றும், அதை நான் பெற்றுக்கொண்டு ஆஜர் ஆகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஆஜர் ஆகாததால் தான் எனக்கு வழங்கப்பட்ட தனிப்பட்டா இரத்து செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தனிப்பட்டா இரத்தானதால் தான் இரண்டு தடவை வரைபட அனுமதி பெற்றும், என்னால் வீடு கட்ட இயலவில்லை என்றால் சரியல்ல. தனிப்பட்டா இரத்தான விவரத்தை மறைப்பதற்காகத்தான் பணப்பற்றாக்குறையால் வீடு கட்டவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தனிப்பட்டா இரத்தான விவரத்தை மறைத்து பிரதிவாதிகளுக்கு நான் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்வராஜிடமிருந்து பதிவு செய்யப்படாத விடுதலைப்பத்திரம் எதுவும் நான் எழுதி வாங்கவில்லை. நான்

அவரிடம் எழுதி வாங்கியதற்கு பதிவு செய்யப்பட்ட CD உள்ளது என்றால் சரியல்ல. நான் தான் 1ஆம் பிரதிவாதியிடம் பதிவு செய்யப்படாத விடுதலைப் பத்திரத்தையும், CD ஐயும் கொடுத்தேன் என்றால் சரியல்ல. செல்வராஜ், சேகர், குலோத்துங்கன் பெயரில் ஏற்பட்ட கிரையம் சம்பந்தப்பட்ட வில்லங்கத்தை நான் தீர்த்துக்கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எழுதிக்கொடுத்த கிரையம் செல்லுமா செல்லாதா என்ற அச்சத்தில் தான் நான் செல்வராஜ், சேகர், குலோத்துங்கன் ஆகியோரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர்களை எனக்கு தெரியாது. நான் உண்மையான கரங்களுடன் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. செல்வராஜ், சேகர், குலோத்துங்கன் ஆகியோரை எனக்கு தெரியவேண்டிய அவசியமில்லை என்றும், நான் எழுதிக்கொடுத்த சொத்தில் பிரச்சனை ஏற்பட்டால் அதை தீர்த்துக்கொடுக்கும் பொருப்பு எனக்கு உள்ளது என்றால் அவர்களுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லை. என்னுடைய நல்லெண்ணத்தைக் காட்ட நான் விற்ற சொத்தில் பிரச்சனை ஏற்படுத்திய நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டும் என்று சொன்னால் நான் விற்ற சொத்திற்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் சொல்லக்கூடிய காரணம் சட்டத்திற்கு ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கு போடுவதற்கு முன்பாக வக்கீல் மூலம் நோட்டிஸ் அனுப்பினேன் என்றும், அதற்கு அவர்களும் பதில் அனுப்பினார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை.